# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28.

" முயற்சி திருவினை யாக்கும் "

தொகுதி 25 | சார்வரி ஹூ பங்குனி மீ 1961 மார்ச்சு மீ | பகுதி 12

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பத்திராதிபர் குறிப்புகள் | ... | 203 |
| சுகம் பெற வழி | ... | 205 |
| ராம ராஜ்யம் | ... | 206 |
| பொன்னி வளவன் (நாடகம்) | ... | 208 |
| " இளைஞர்கள் கணக்கில்லாமல் ஓட வேண்டும் " | ... | 210 |
| செய்தித் திரட்டு | .. | 211 |
| ஜெர்மன் திரைப் படங்கள் தம்மைத்தாமே தணிக்கை செய்துகொள்ளுகின்றன | ... | 213 |


உள் நாடு : வருஷ சந்தா ரூ. 2.00 தனிப் பிரதி 25 ந.பை

# பாலர் கல்வி

| தொகுதி 25 | சார்வரி ஞு பங்குனி மீ<br>1961 மார்ச்சு மீ | பகுதி 12 |
|---|---|---|

## பத்திராதிபர் குறிப்புகள்

**பஞ்சாயத்து போர்டு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்**

புதுச் சம்பள விகிதம் பஞ்சாயத்து ஆரம்பப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு இதுவரை அமுல் ஆகாதது வருந்தத்தக்க விஷயம். எட்டு மாத காலமாகியும், புதுச் சம்பள விகிதம் அமுலுக்கு வரவில்லை. அனேக இடங்களில் பஞ்சாயத்துப் பள்ளிகளிலுள்ள செகண்டரி கிரேடு ஆசிரியர்கட்குப் பழைய ஸ்கேலான ரூ. 45-2-85 கொடுபடவில்லையெனத் தெரிகிறது. எய்டெட் ஆரம்பப் பள்ளிகளில் அமுல் நடத்தப்படும் பொழுது, பஞ்சாயத்துப் பள்ளிகளில் அமுல் நடத்தத் தாமதமாவானேன்? இனியாவது இப்பஞ்சாயத்துப் பள்ளி ஆசிரியர்கட்கு எய்டெட் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைப்பது போல் முதல் தேதி சம்பளமும், புதிய ஸ்கேல் சம்பளமும், பழைய சம்பள பாக்கியும் தாமதமில்லாமல் கிடைக்கும்படி சர்க்கார் செய்வார்களென நம்புகிறோம்.

**புதுச் சம்பளத் திட்டமும் 5 ரூபாய் உயர்வும்**

சர்க்கார் திட்டப்படி யாருக்கும் குறைந்தபட்ச உயர்வு 5 ரூபாய் கிடைக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒரு ஆசிரியருக்கு இந்த உயர்வு இல்லையென அர்த்தம் கொள்ள முடியாது. அப்படியிருந்தும், 5 ரூபாய் உயர்வு சம்பளத்தில் கிடைக்காததாகப் பல இடங்களிலிருந்து நமக்குத் தபால்கள் வந்துகொண்டிருக்கின்றன. இந்த விஷயத்தில் சர்க்கார் தெளிவான உத்திரவுகளை யனுப்பி, ஆசிரியருக்குக் கிடைக்கவேண்டிய உயர்வு கிடைக்கும்படிச் செய்ய வேண்டுகிறோம்.

**சம்பள உயர்வு நிர்ணயம் (Weightage)**

எந்தப் பள்ளியில், எந்த கிரேடில், எந்தச் சம்பளத்தில், எந்த ஏஜன்ஸியில், எவ்வளவு Breaks உடன் கூடிய சர்வீசாயிருந்தாலும், அது ஆசிரியர் சேவைதான். தேசத்திற்குச் செய்த சேவைதான். ஆசிரியர் ஆசிரியர்தான். அதற்கு மேல்பதவிக்கு அவர் போக முடியாது. மொத்த ஆசிரியர் சர்வீசை, சர்வீஸ் ரிஜிஸ்தர்படிக் கணக்கிட்டு weightage-சம்பள உயர்வு-அவருக்குக் கொடுபட்டிருக்க வேண்டும். உத்திரவு தேதியிலிருந்து எட்டு மாத காலம் கடந்தும், இவ்விஷயம் நிர்ணயிக்கப்படாதது வருந்தத்தக்க விஷயம். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குத் திட்டமிட்டது போல், மாதம் இருமுறை ரிப்போர்ட்டுகள் சர்க்காருக்கு அனுப்பவேண்டுமென்று திட்டமிட்டால், எவ்வளவு ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் இன்னும் கொடுபடவில்லையென்ற விஷயம் தெளிவாகும். சர்க்கார் ஆவன செய்வார்களென நம்புகிறோம்.

**ஆசிரியர்களின் பென்ஷன் திட்டம்**

ரிடையரான ஆசிரியர்கள் மறுபடியும் ஆசிரியர் வேலையிலிருந்தால், அந்தக் காலத்திற்குப் பென்ஷன் கிடையாது என்ற உத்திரவைப் புனராலோசனை செய்யும்படிச் சர்க்காரை வேண்டுகிறோம்.

பெரும்பாலான ஆசிரியர்கள் மாதம் ரூபாய் பத்துக்குக் குறைவாகவே பென்ஷன் வாங்குகிறார்கள். நம் நாட்டில் சமத்துவத்திற்காகப் பாடுபடும் நமது சர்க்கார், சர்க்கார் ஆசிரியர் வேறு, எய்டெட் பள்ளி ஆசிரியர் வேறு என்கிற கொள்கை கூடாதெனப் பென்ஷன் திட்டம் ஒப்புக்கொண்ட சர்க்கார், சர்க்கார் ஆசிரியர்கட்குடைய சலுகையை எய்டெட் பள்ளி, லோகல் போர்டு பள்ளி ஆசிரியர்கட்கும் விஸ்தரித்து, சர்க்கார் விதிப்படி மறுவேலைச் சம்பளமும், பென்ஷனும் சேர்ந்து கடைசியாக வாங்கிய சம்பளத்தைவிட அதிகமிருக்கக் கூடாது என்ற விதியை அமுலுக்குக் கொண்டு வருவார்களென நம்புகிறோம். ஆசிரியர்கள் மறுவேலையில் அமர்த்தப்படும்பொழுது கடைசி சம்பளம் கொடுக்கப்படாததால், அவர்களுடைய பென்ஷன் தொகையும் சர்க்கார் விதிக்குட்பட்டு மேலே கிடைத்தால், விலைவாசிகள் உயர்ந்த இக்காலத்தில் ஓரளவுக்குக் காலம் தள்ள முடியும். இவ்விஷயத்தில் ஆசிரியர்கள் கேட்பதெல்லாம் சர்க்கார் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சலுகை தான்.

**1—6—1959-ல் வேலை இழக்க நேரிட்ட ஆசிரியர்கள்**

சர்க்கார் உத்திரவால் சில எய்டெட் ஆரம்பப் பள்ளிகள் சம்பளம் வசூலிக்கும் பள்ளிகளாகவே தொடர்ந்து வேலை செய்ய நிர்ணயித்ததால், 200-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வேலையிழக்க நேர்ந்தது. இவர்கள் 1 மாத காலத்திலிருந்து 3 மாத காலம் வரை வேலையில்லாமலிருந்து கார்ப்பரேஷன் முதலிய பள்ளிகளில் வேலைக்கு எடுத்துக்கொள்ள ஏற்பாடாயிற்று. வேலையில்லாமலிருந்த காலத்தில் கடனுக்குட்பட்ட ஆசிரியர்கள் இன்னும் கஷ்டத்திற்குள்ளாயிருக்கிறார்கள். சர்க்கார் புது உத்திரவு 1-6-1959-ல் வராமலிருந்தால், இவர்களுடைய சம்பளம் கிராண்டு தொகையாக வினியோகிக்கப்பட்டிருக்கும். அத்தொகைதான் இவர்களுக்குக் கிடைக்க வேண்டியது. வேலையில்லாத காலத்திற்குச் சம்பளமா என்றால், இவர்களின் தவறால் இவர்கள் வேலை இழக்கவில்லை. உடனடியாக இவர்களுக்கு வேலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், இப்பிரச்னை எழும்பியிருக்காது. இவ்வாசிரியர்களின் கஷ்டத்தைப் போக்க சர்க்கார் இப்பொழுதாவது சம்பளப் பட்டுவாடா உத்திரவு போடுவார்களென எதிர்பார்க்கிறோம்.

**வேலை நிரந்தரம்**

மார்ச்சு மாதம் என்றால் பல ஆசிரியர்கட்கு நோட்டீசு கொடுக்கப்படும் மாதமாகிறது. எய்டெட் ஆரம்பப் பள்ளிகளில் வருடா வருடம் நோட்டீசு பெறுபவர்கள் அனேகர். நடு வருடத்திலும் நோட்டீசு பெறுபவருண்டு. வேலை நிரந்தரத்திற்கான சட்டம் சீக்கிரத்திலேயே சர்க்கார் செய்யுமென எதிர்பார்க்கிறோம்.

**சம்பளம் வசூலிக்கும் ஆரம்பப் பள்ளிகள்**

இப்பள்ளிகள் சர்க்கார் அங்கீகாரம் பெற்றவை. 1-6-1959-லிருந்து சம்பளம் வசூலிக்கும் பள்ளிகளாக இயங்குவதால், இப்பள்ளிகளிலுள்ள ஆசிரியர்கட்குப் புதுச் சம்பள விகிதம் கிடைத்ததாகத் தெரியவில்லை. சம்பளம் எது வேண்டுமானாலும் கொடுக்கலாமென்கிற முறையிலிருக்கிறது. அங்கீகாரம் பெற்ற பள்ளிகளாதலால், இப்பள்ளி ஆசிரியர்கள் விஷயத்தில் புதுச் சம்பள

விகிதம் அமுலுக்குக் கொண்டுவரும்படி சர்க்காரை வேண்டுகிறோம்.

**ஹையர் கிரேடு ஸ்தானங்களில் வேலை செய்யும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்**

இவ்வாசிரியர்களின் விவரங்களை யூனியன் ஆபீசுக்கு அனுப்பும்படி ஏற்கனவே கேட்டிருந்தோம்; சில ஆசிரியர்களிடமிருந்தே இத்தகவல்கள் வந்திருப்பதால், ஆசிரியர் கூட்டங்களில் இதைப் பிரஸ்தாபித்து, விவரம் பூராவும் யூனியனுக்குக் கிடைக்கும்படி வாசகர்கள் செய்தால் உதவிகரமாயிருக்கும்.

---

## சுகம் பெற வழி

(‘நந்த வனத்திலோர் ஆண்டி’ என்ற மெட்டு)

கள்ளம் சிறிதும் இல்லாத—இளம்
பிள்ளைகாள்! இன்பமாய்ப் பிணியின்றி வாழ,
மெள்ள நான் சொல்வதைக் கேளீர்—உங்கள்
உள்ளத்தில் ஆழமாய் ஊன்றிடச் செய்வீர்!
நோயுற்ற உடல்கொண்ட வாழ்க்கை—நல்ல
தாயற்ற குழந்தைபோல் தயங்கித் தள்ளாடும்
வெள்ளி முளைப்பதன் முன்னே—துள்ளிப்
பள்ளியின் நீங்கிப் பரமனைப் பாடி,
காலைக் கடன்களைத் தீர்த்து—நல்ல
பாலைப்போல் பற்கள் துலங்க விளக்கி,
ஓடும் வெள்ளம்கொண்ட ஆற்றில்—பாய்ந்து
சாடிக் குதித்துக் கழுவிக் குளிப்பீர்!
கந்தைத் துணியே ஆனாலும்—அதைச்
சிந்தையிற் கொள்ளாமல் சீராய்த் துவைப்பீர்!
பாகமான காயும் சோறும்—மிக்க
வேகமாய் உண்ணாமல் மென்று புசிப்பீர்!
நெற்றி வியர்வை நிலத்தில்—வீழச்
சுற்றி உழைத்துச் சுகத்தைப் பெறுவீர்!
வீட்டில் வெய்யில் தென்றல் வீச—சன்னல்
காட்டி நல்லமேட்டில் நாட்டி வசிப்பீர்!
இத்திற நெறியிலே நின்றால்—நீங்கள்
மெத்த சுகம்பெற்று மேன்மையாய் வாழ்வீர்!

—எச். வைத்தியநாதன்

---

# ராம ராஜ்யம்

G. கிருஷ்ணமூர்த்தி, M.L.C.

பங்குனி மாதம். பதினெட்டாம் தேதி. பட்டப்பகல் பன்னிரெண்டு மணி. கதிரவனின் கிரணங்களின் தாபத்தால் தாகம் தாங்கமுடியாத ஒரு கிழவர் ஒரு வீட்டின் முன் நிற்கிறார். கம்பிப்போட்ட திண்ணை. ஒரு சிறு பையன் கம்பி வழியாக எட்டிப் பார்க்கிறான்.

**கிழவர் :**—"குழந்தாய், கொஞ்சம் தீர்த்தம் வாங்கிக் கொண்டுவா. தாகமாக இருக்கிறது."

**சிறுவன் :**—"தெருக்கோடியில் வாய்க்கால் இருக்கிறது. போய்ச் சாப்பிடுங்கள்."

**கிழவர் :**—"கதவைத்திறந்துவிடு. சற்று நேரம் உட்கார்ந்துவிட்டுப் போனால் தாகம் குறையும்."

**சிறுவன் :**—வழிப்போக்கர் எவரும் உள்ளே வரக்கூடாது என்பதற்காகத் தான் எங்கப்பா கம்பி போட்டிருகிறார்."

கிழவர், "அடராம! இது நவ நாகரீகக் குழந்தை. போகட்டும்" என்று சொல்லிக்கொண்டே இரண்டு வீடு தள்ளி ஒரு வீட்டண்டைச் சென்றார். வீடு திண்ணையுடையது. கம்பிப்போட்டுத் தடுக்கப் படவில்லை. ஒரு சிறுவன் வாசற்படியில் நின்று கொண்டிருந்தான். கிழவர் அப் பையனைப் பார்த்து, "குழந்தாய்! கொஞ்சம் தீர்த்தம் வாங்கிக் கொண்டுவா" என்றார்.

சிறுவன் கிழவரை உட்காரச் சொல்லி விட்டு, வேகமாய் வீட்டிற்குள்போய் கால் கழுவிக்கொள்வதற்குத் தண்ணீர், குடிப்பதற்கு நல்ல தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்தான். கிழவர் கைகால்களைச் சுத்தஞ் செய்து கொண்டு, குளிர்ந்த தண்ணீரைக் குடித்து விட்டுப் பையனைக்கேட்டார்:—

"அம்பி! உன் பெயர் என்ன ?"

**சிறுவன் :**—"என் பெயர், ராமன்"

**கிழவர் :**—(சந்தோஷத்துடன்) "நல்ல பெயர். உன் தாய்தந்தை நல்ல பழக்கம் செய்து வைத்திருக்கிறார்கள். பெரியோர்களுக்கு மரியாதை செய்யும் வழக்கம் உனக்குப் போட்டியிருக்கிறார்கள். உன் தகப்பனார் பெரியோர்களுக்கு மரியாதை செய்யத் தவறமாட்டார் போலிருக்கிறது."

**சிறுவன் :**—"தாத்தா! என் தகப்பனார் தினசரி **ராம ராஜ்யம்** வரவேண்டும்! **ராம ராஜ்யம்** வரவேண்டும். நீங்களெல்லாம் ராம ராஜ்யத்தில் ஜனங்கள் நடந்து கொண்டதுபோல் நடந்து கொள்ள வேண்டும் என்று எங்களுக்கு எடுத்துச் சொல்லுவார். நம் தேசம் பழைய முறைக்கு மாற வேண்டும் என்பார். விருந்தாளிகளைத் தெய்வமாகக் கொண்டாட வேண்டு மென்பார். வீட்டுத் திண்ணைக்குக் கம்பி போடக்கூடாது. வழிப்போக்கர்கள் உட்கார்ந்து இளைப்பாற வேண்டும். இரவில் வழிப்போக்கர்கள் தூங்க திண்ணை உதவும். தூங்குவதற்கு ஒரு ரூமிற்கு இவ்வளவு ரூபாய் என்கிற வழக்கம் நம் நாட்டிற்கு உகந்ததல்ல. விருந்தாளிகளை உபசரிப்பது நம் நாட்டின் பழக்கம். 'ஒரு அப்பளம் அதிகப்படி சாப்பிட்டார்—அதிகப்பணம் வாங்கவேண்டும் அவரிடம்'—என்று சொல்லும் கடைகள் நம் நாட்டில் முற்காலங்களில் கிடையாது. வஸ்திரங்கள் வாங்க வாங்கப் பழைய வஸ்திரங்களை நம்மைவிட எளியோர்களுக்குக் கொடுக்க வேண்டும். அவைகளைப் பாத்திரங்கள் வாங்குபவனிடம் மாற்றம் செய்வது நம் நாட்டில் விரும்பத் தகாத நவநாகரீகப் பழக்கம். எல்லோரும் வாழ வேண்டுமென்ற எண்ணத்துடன் ராமராஜ்யத்தில் ஜனங்கள் வாழ்ந்து வந்தார்கள். யார் வந்து உதவி கேட்டாலும், '**இல்லை**' என்று சொல்லும் வழக்கம் ஒரு வீட்டிலும் இருக்காது. நம் வீட்டிலும் குழந்தைகள் முதல் எல்லோரும் வந்து கேட்டவர்களுக்கு '**இல்லை**' என்று சொல்லக்கூடாது. முடிந்ததைக் கொடுக்கவேண்டும் என்று எங்களுக்குத் தினசரி சொல்லுவர்."

**கிழவர் :**—"நவநாகரீகச் சுழலில் அகப்படாத ஒரு குடும்பத்தைப் பார்த்த எனக்கு மிக்க சந்தோஷத்தை அளிக்கிறது. எல்லா ஜனங்களும் நன்றாக வாழ்ந்தால்தான் நாமும் நன்றாக வாழ முடியும் என்ற உண்மையை ராமராஜ்யத்தில் அறிந்திருந்தார்கள். அதை உன் குடும்பத்தார் அறிந்து அதன்படி உன்னையும் நடக்கும்படிச் செய்திருப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. நீ 120

வயது இருந்து, பலருக்கும் நன்மை செய்யவேண்டும்" என்று சிறுவனை வாழ்த்தினுர்.

**சிறுவன் :**—"தாத்தா! எங்கள் வீட்டில் எல்லோரும் 100 வயது இருக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். நீங்கள் 120 வயது என்று சொன்னதின் ரகசியம் என்ன?"

**கிழவர் :**—"அம்பி! நவக்கிரஹங்கள் என்று ஒன்பது கிரஹங்கள் உண்டு. அவைகளின் தசை பூராவும் ஒருவன் வாழலாம். ஒவ்வொரு கிரஹத்தின் தசை பூராவும் வாழ்ந்தால் 120 வருஷம் ஆகும். அப்படி வாழமுடியும். ஆனல், அதற்குச் சில வழிகள் உண்டு. குழந்தையாகிய உனக்கு இப்பொழுது அனுசரிக்க வேண்டிய சில விதிகளை மட்டும் சொல்லுகிறேன்.

ஒரு மரத்தை எடுத்துக்கொள். வேருக்குத்தான் தண்ணீர் ஊற்றுவோம். குளிர்ந்த ஜலத்தைத்தான் ஊற்றுவோம். காலையிலே தண்ணீர் பாய்ச்சுவோம். அப்படிச் செய்தால், மரம் ஓங்கி வளர்த்து, த்ழைத்து, புஷ்பித்து, பலன்கொடுக்கும். நம்முடைய தேகம் வேருடன் பெயர்த்துத் தலைகீழாக நிறுத்தப்பட்ட மரம் போன்றது. தலைதான் வேர். இந்த வேருக்குத் தினமும் காலையில் குளிர்ந்த ஜலத்தைக் கொடுத்துக் குளித்து வந்தால், நம்தேகம் தழைத்து நல்ல பலத்துடன் கூடியதாகும்.

பழக்க வழக்கங்களினுல்தான் நம்முடைய ஆயுளை நீடிக்கச் செய்துகொள்ள முடியும். பூராவும் வாழமுடியும்.

சூரியன் உதித்தது முதல் மறையும் வரையிலும் தலையைக் கீழேவைத்துப் படுக்கக்கூடாது. இரவில்தான் படுத்துறங்க வேண்டும். இது ஒரு முக்கிய விதி.

பல் சுத்தஞ் செய்யும்போது பற்களுக்கு முன் பக்கத்தைத் தவிர வேறு பக்கங்களுமுண்டு என்பதை மறக்கக்கூடாது.

ஏதாவது சாப்பிட்டதும், பதினைன்கு தடவைகள் வாயைக் கொப்பளிக்கவேண்டும்.

எந்த நேரத்திலும், எதையும் சாப்பிடும் வழக்கம் கூடாது. திறந்து வைக்கப்பட்ட ஆகாரத்தைப் புசிக்கக் கூடாது. ஐஸ் போன்ற குளிர்ந்த பதார்த்தங்களைச் சாப்பிடக்கூடாது. அதிகக் காரம், அதிகப் புளிப்பு உள்ள சாப்பாட்டையோ, பதார்த்தங்களையோ சாப்பிடக் கூடாது. மிதமாகவே சாப்பிடவேண்டும். நன்ருக நிறுத்திச் சாப்பிட வேண்டும். அள்ளி அள்ளி அவசரத்தில் சாப்பிடக்கூடாது.

ஒன்றன்மேல் ஒன்று ஆடை அணிவது நம் தேக சுகத்திற்கு நல்லதல்ல. குளிர் நாடுகளில் உள்ள பழக்கம் நம் ஊர்களுக்குத் தேவையில்லை. காற்று, வெயில் தேகத்திற்கு அவசியமென்பதை மறக்கக்கூடாது. திறந்த வெளியில் அதிகநேரம் செலவழிக்க வேண்டும்.

கூட்டமான இடங்களுக்கோ, புழுதி பறக்கும் சாலைகளுக்கோ போகாமலிருப்பது நல்லது. சுத்தக்காற்றின் அவசியத்தை உணரவேண்டும்.

பிறருக்குத் தீங்கு, சிறிய ஜந்துக்களுக்குக்கூட தீங்கு என்பதைச் செய்யாமலிருக்கவேண்டும். அப்பொழுது நமக்கு மனது சந்தோஷமாக இருக்கும். கவலையே இருக்காது. ஆயுள் அதிகமாகும். இத்துடன் இப்பொழுது நிறுத்திக்கொள்ளுகிறேன். பின்னல் ஒரு சந்தர்ப்பத்தில் மற்ற விபரங்கள் சொல்லுகிறேன்."

**சிறுவன் :**—"தாத்தா! இதேமாதிரி எல்லாப் பையன்களுக்கும் சொன்னல் நன்ருயிருக்கும், தாத்தா."

**கிழவர் :**—"இப்பொழுதுதான் 7, 8 வருஷம்முன் ரிடையரானேன். நான் டீச்சராய்த்தானிருந்தேன். அனேக பையன்களுக்கு இவ்விஷயங்களைச் சொல்லியுள்ளேன். இன்றைக்கு உனக்குச் சொன்னேன். போய்வரேன், அம்பி! நீ 120 வயது வாழ்வாயாக! ராமராஜ்யத்தை உண்டு பண்ணுவாயாக!"

---


**திரு. S. நடராஜன், B.A., L.T., M.L.C.**

**அவர்களின்**

60-ஆவது வயது பூர்த்திக் கொண்டாட்டம் 1961 ஏப்ரல் யூனியன் நிர்வாக சபைக் கூட்டத்தில் நடத்தப்படும்.

**காரியதரிசி**

# பொன்னி வளவன் (நாடகம்)

ஆ. வேலுமணி

தலைமையாசிரியர், இளநிலை ஆதாரப்பள்ளி, காரவலசு.

## காட்சி: 1.

**இடம்:** அரண்மனை.

**நடிகர்:** கரிகாலன், அவையோர், ஒற்றன் (சிறையிலிட்டு, தீ வைத்த தன் மாமனிடமிருந்து தப்பி வந்த கரிகாலனை, பட்டத்து யானை மாலை சூட்டி அரசனாக்கியது. முறைப்படி முடி சூட்டு விழா நடைபெறுகிறது)

**அமைச்சர்:** பரம்பரை பரம்பரையாக ஆண்டு வந்த சோழப் பேரரசை பாதுகாத்து, நீதி நெறி தழைக்க வந்த எங்கள் இளவரசர் கரிகாலனுக்கு, சோழ மண்டல மணி முடி சூட்டிப் பெருமைப் படுத்துகிறோம்.

**கரிகாலன்:** செழுங்கருணைப் புகழ் வளர்க்கும் செந்தமிழ நாட்டோரே! அறவழி அமைச்சர்களே! மாண்ட என் குலத்தை, மீண்டும் தழைக்கச் செய்து, எனக்கும் மணி முடி சூட்டி மகிழும் இம்மா நகர மக்களுக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

(இடையே ஒற்றன் ஒருவன் வருகிறான்)

**ஒற்றன்:** அரசே! இந்த முடி சூட்டு விழாவைத் தடுப்பதற்கு, தங்கள் மாமன் புகார் நகரை நோக்கிப் படை யெடுத்து வருகிறார்.

**கரிகாலன்:** வரட்டும்! படைகொண்டு வரட்டும்! சிறுவன் நானெனை சீறி யெழுந்து விட்டார். என் பொன் நாட்டு மக்களே! இந்த பாயாத புலி காட்டும் பாவனைக்கு நான் பயந்திடுவேனா! (கோபத்தில்) பயமில்லை, அன்று தீயிலிருந்து ஒரு கால்கருக ஓடி வந்தேனே! பயந்தேனா? சோழ மண்டலக் குலப் பெருமையைக் காப்பதற்கு இந்த சிறியேனுக்கு முடி சூட்டி மகிழ்ந்தீர்களே! எப்படிப் பொறுப் பேற்பேன் எனப் பயந்தேனா? தேன் பூச்சி சிறிதானாலும் கொட்டாமல் விடாது. அமைச்சரே! போர்ப் படைக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

**மக்கள்:** சோழ மன்னர்! வாழ்க! கரிகாலர்!? வாழ்க!

## காட்சி: 2.

**இடம்:** போர்ப் பயிற்சி சாலை.

**நடிகர்:** கரிகாலன் தளபதி, வீரர்கள்.

**கரிகாலன்:** உயிரை விட நாடு பெரிதெனக் காக்கும் நல்ல தமிழ் வீரர்களே! கேட்டீர்களா? சேதியை, நம் தாய்த் திரு நாட்டை அடைய, என் தாய் மாமனே மனப்பால் குடிக்கிறார். நண்பர்களே! 'வாழ்ந்தால் உரிமையுடன், வாழ் விழந்தால் மண்ணுடன்' என்ற நீதியிலே வளர்ந்து, போர்க் கோலத்திலேயும், புறமுதுகு காட்டாதே இனம் நம்மினம் என்பதை உணர்ந்து, அவர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்க வேண்டும்.

**தளபதி:** வேந்தே! காலாற் படையும், குதிரைப் படையும் தயாராகி விட்டன.

**கரிகாலன்:** நல்லது! குதிரைப் படையை புகார் நகரத்தின் தென் பகுதியிலும், காவிரியின் இரு மருங்கிலும் காலாற் படைகளை நிறுத்த ஏற்பாடு செய்யுங்கள். கிழக்கே செவ்வானம் காண்பதற்குள் சோழ வளநாடு செந்நிலமாக வேண்டும். இரத்த வெள்ளம் காவிரியோடு கலக்கவேண்டும், புறப்படுங்கள். போர்! போர்! போர்.

## காட்சி: 3.

**இடம்:** அரண்மனை.

**நடிகர்:** கரிகாலன், புலவர்.

(யானை யொன்று அலங்கரித்து முன் வாயில் நிற்க, உள்ளே, கரிகாலன்

போர்க் கோலத்துடன் அமர்ந்திருக்க, புலவர் உள்ளே நுழைகிருர்.)

**புலவர் :** சோழர் குலக் கொழுந்தே! வாழ்க. நின் வீரர் இப்போது, உழுவு கண்ட சேற்றினிலே போரிடுவர். எதிரி யின் உடலே வயலுக்கு உரமிடுவர். அதில் விளைந்த நெல்லெடுத்து, சோற் ருல், மடையடைப்பர், வேந்தர் வேந்தே! உன் எதிரிகள் விளைக்கும் சேதத்தை விட, சோழ வளநாட்டை, ஒரு பெண் பெருஞ் சேதம் விளைவிக்கிருள் வேந்தே!

**கரிகாலன் :** அப்படியா? யாரந்தப் பெண்.

**புலவர் :** குடகு மலே தாயாகி குமுறி யவள் ஓடி வந்து, தேடா வளந்தந்து தெய்வ மகளானுள், விரும்பு மிடமெல் லாம் விளையாடி வருவதனுல், பெருஞ் சேதம் விளையுதே பெருமகனே உன் நாட்டில்.

**கரிகாலன் :** புரியும்படி சொல்லுங்கள் புலவரே.

**புலவர் :** வேறு யாருமில்லே வளவ! உன் தாய்க் குலத்துத் தாயாகிய காவிரி யன்னே, நீ கொள்ளும் சீற்றத்தை விட, பெரிய சீற்றங்கொண்டு உன் நாடழித்து விளையாடுகிருள்.

**கரிகாலன் :** அப்படியா? புலவர் பெரு மானே! என் நாட்டின் மேல் நான் கொள்ளும் அக்கறையை விட, அதிகம் பொருப் பேற்ற தங்களுக்கு எப்படி நன்றி சொல்வேன், நாளேயே முடிவு செய்வோம்.

**புலவர் :** நன்று மன்னு! நன்று. இந்தப் பெருமை எங்கள் குலத்துக்கே உரித்தானது.

## காட்சி: 4.

**இடம் :** அரண்மனே.

**நடிகர் :** கரிகாலன், அமைச்சர்கள், அவையோர். (வெற்றி கண்ட கரிகாலன் அவையில் வீற்றிருக்க).

**கரிகாலன் :** சோழ வள நாட்டோரே! இந்த வெற்றி விழா நாளிலே ஒரு சேதி! நம்குல மகளாம் காவேரியின் சீற்ற மடக்கி, அமைதி வழிப்படுத்த வழி காண வேண்டுமென்பது என் நீண்ட நாள் பேரவா!

**அமைச்சர் :** அரசே! திருச்சிராப் பள்ளியிலுள்ள கோட்டைக் கிடையில் ஒரு அணே கட்டிவிட்டால் நல்லது வேந்தே!

**கரிகாலன் :** அதை விட நம் புலவர் கூறிய யோசனேப்படி, இரு மருங்கிலும் கரை கட்டி விடலாமென திட்டமிட்டுள் ளேன்.

**அமைச்சர் :** ஆம் அரசே! அவ்வாறே செய்து விடுவோம். நாளேயே! வைகை வெள்ளத்தைத் தடுத்தாற்போல், வீட்டுக் கோர் ஆள் வர உத்தர விடுகிறேன்.

## காட்சி: 5.

**இடம் :** காவிரிக்கரை.

**நடிகர் :** கரிகாலன், அமைச்சர், புலவர்.

(காவிரிக் கரையைப் பார்வையிட்ட வண்ணமாக).

**புலவர் :** சோழ வள நாடா! இப் போது பார். உன் வீரத்திற்கு முன் அடக்கிய எதிரியைப் போல, எவ்வளவு அமைதியாகச் செல்கிருள் காவிரி பார்த் தாயா?

**கரிகாலன் :** தமிழ் காக்கும் மேதையே! நாடு காக்க நல் வழி கூறி சோழ மண்டலத்துக்கே வாழ் வளித்தது தாங்கள் தானே!

**புலவர் :** புலவர்களேப் போற்றி வளர்க்கும்

பொன்னி வள நாடா!
வற்ருத பொன்னியைப்போல்
புகழ் சிறக்க வாழ்ந்திடுக!

வாழியவன் தன் வள நாடு!
மகவாய் வளர்க்கும் தாயாகி!
ஊழி உய்க்கும் பேருதவி!
ஒழியாய் வாழி காவேரி!

(திரை)

# "இளைஞர்கள் கணக்கில்லாமல் ஓடவேண்டும்"

" நம் குழந்தைகளில் கிட்டத்தட்ட 58 சதவிகிதம் பேர், தமது உடலை இடைவிடாமல், அனுரோக்கியமான நிலையில் நிறுத்துவதால், தாற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ கெடுதலுக்குள்ளாக வேண்டியிருக்கும்; எது எப்படியிருந்தாலும், உடலுக்கு சரியான அசைவு கொடுக்காத காரணத்தால் அவர்கள் பேராபத்துக்கு இலக்காவார்கள் என்பது நிச்சயம்." மேற்கு ஜெர்மனியில், உடலமைப்புக் கோளாறுகள் பற்றிய நிபுணர்கள் வெளியிட்டுள்ள இந்தக் கருத்து, பொதுமக்களிடையே தீவிரக் கலவரத்தை உண்டாக்கியிருக்கிறது. அமெரிக்கா உள்பட வேறு சில நாடுகளிலும் கூட இந்த மாதிரிக் கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது. ஜெர்மன் வைத்தியர்கள் குழந்தைகளின் அனுரோக்கியமான வளர்ச்சிக்கு இரண்டு காரணங்கள் கொடுத்திருக்கிறார்கள்: இளைஞர்களுக்குப் போதிய அளவு உடல் அசைவும், உடற்பயிற்சியும் இல்லாதது முதல் காரணம்; இரண்டாவதாக, நாகரிக நாடுகளில் பொதுவாக, இளைஞர்களின் உடல் வளர்ச்சியும், ஆத்மிக வளர்ச்சியும் மட்டுக்கு மிஞ்சிய அளவு விரைவாயிருப்பதாலும் சீரான வளர்ச்சி பாதிக்கப்படுகிறது என்று ஜெர்மன் வைத்திய நிபுணர்கள் கூறுகிறார்கள்.

மேற்கு ஜெர்மனியில் கீல் துறைமுகத்துக்குத் தென் கிழக்கேயுள்ள ப்ளான்ஸ் என்னும் பட்டணத்தில், சிறுவர் கல்விக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கழகத்தை நிறுவியிருப்பவர்கள், முற்றிலும் புதிய வழிகளையும் புதிய முறைகளையும் பின்பற்றுகிறார்கள். அந்தக் கழகத்தில் கல்வி பயிலும் சிறுவர்கள் ஒரு வரம்பில்லாமல் உடற் பயிற்சி செய்வதுதான் மிக முக்கியமான அம்சம் என்று அவர்கள் கருதுகிறார்கள். பட்டணத்தின் ஏரியைச் சுற்றியுள்ள வனப் பகுதிகளில் அந்தச் சிறுவர்கள் கண்டபடி துள்ளிக் குதித்து ஓடிச் சாடி வேண்டியது இந்த நவீன திட்டத்தின் முதல் அம்சமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தக் கழகத்து மாணவர்கள் ஏரிக் கரையிலுள்ள புதர்கள் செடிகள் வழியே மணிக் கணக்காக ஓடலாம்; ஆப்பிளும் அக்ரோட் கொட்டையும் வேட்டையாடச் செல்லலாம். சகைகளும், தடைகளும், குழிகளும் அமைப்பதற்கு உழைக்கலாம்; தம் இளம் மனத்தில் தோன்றும் கற்பனைகளை யெல்லாம் செயலில் செய்து காட்டலாம்.

" இளைஞர்கள் ஒரு வரம்பில்லாமல் ஓடிச்சாட ஆசைப்படுகிறார்கள்" என்று கழகத்தின் தலைவரும், உடலமைப்புக் கோளாறுகள் பற்றிய ஜெர்மன் நிபுணருமான டாக்டர் கோட்ஸ்சே கூறுகிறார். "குழந்தைகள் மூச்சுத்திணற ஓடிக் களைத்துப் போகிறார்களே, அதுதான் அவர்களுக்கு மிகச் சிறப்பான சுவாசப் பயிற்சியாகும். இந்தக் கழகத்தில் உடலும் மனமும் ஒருங்கே வளர்ச்சியும் வலுவும் அடைகின்றன" என்று அவர் சொல்கிறார்.

இளைஞர்களின் அபரிமித வளர்ச்சியும் ஒரு தீவிர ஆபத்தாகும். இதைக் கருதி, இந்தக் கழகத்து மாணவர்களுக்குத் தீய அம்சங்களின் பரிச்சயமே இல்லாதவாறு நிர்வாகிகள் காத்து வருகிறார்கள். எதுவும் மனதில் விரைவாகப் படிந்துவிடும் கட்டமாதலால், கொள்ளை கொலைக் கதைகள், தீய வழி காட்டும் புத்தகங்கள், இந்திரிய ஆசையைக் கிளரக்கூடிய புத்தகங்கள், சூதாட்ட யந்திரங்கள் இவற்றையெல்லாம் இளைஞர்கள் அணுகவிடுவதில்லை. சினிமா பார்ப்பதற்கு யாரும் கட்டுப்பாடில்லாமல் போய்விட முடியாது. ஆனால் நல்லம்சங்கள் அனைத்தும் இந்த மாணவர்களுக்கு உண்டு: விளையாட்டுக்கள், உடற் பயிற்சி, மீன் பிடித்தல், நடை முதலிய எல்லாம் உண்டு. கத்திச் சண்டை, படகோட்டுதல், நீச்சல், குதிரைச்சவாரி, டேபிள் டென்னிஸ், பனி ஹாக்கி, பனிச்சறுக்கு விளையாட்டு இப்படி எல்லா விளையாட்டுகளுக்கும் வசதி உண்டு.

புகைப்படப் பரிசோதனைக் கூடம், பட்டறைகள், எக்ஸ்ரே சாதனங்கள், ஒளிக் கதிர்ச் சிகிச்சை வசதி இது எதற்குமே இங்கே குறைச்சல் கிடையாது. நவீன காலத்துக்கேற்ற சத்துணவு, சரி

யான உடைகள், கட்டு திட்டமான வாழ்க்கை, போதிய நித்திரை இதெல்லாம் இந்தக் கழகத்து இளைஞர்களுக்கு மிக அவசியமான தேவைகளாக உணர்த்தப்படுகின்றது. பிற்பாடு வாழ்க்கையில் ஏற்படவிருக்கும் போராட்டத்துக்கு வேண்டிய மனவலிமையையும், உடல் வலுவையும் இளைஞர்களுக்கு அளித்து, அவர்களை நன்கு ஆயத்தம் செய்வது இந்தக் கழகத்தின் நோக்கம்.

**‘ இன்ட்ரா ’**

---

1-4-1955க்கு முன் ஆசிரியர் வேலையிலிருந்துக் கடைசியாக ரிடையராகிப் பென்ஷன் விதிகளால் பயன் பெருத ஆசிரியர்கள் அடியிற்கண்ட விவரங்களை யூனியனுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள் :

1. ஆசிரியரின் பெயர்
2. கிரேடு
3. கடைசியாக ரிடையரான தேதி
4. வயது (தற்போதையது)
5. ரிடையரான பள்ளி (ஜில்லா)
6. மொத்த சர்வீசு
7. கடைசியாக வாங்கிய சம்பளம்

**காரியதரிசி**

---

## 51-ஆவது கல்வி மகாநாடு (S.I.T. Union), திருச்சிராப்பள்ளி

1961 மே மீ இம்மகாநாடு திருச்சிராப்பள்ளியில் நடைபெறும். **பிரதிநிதி கட்டணம் ரூபாய் ஒன்று.** யூனியனின் அங்கத்தினர்கள் தங்களுடைய கில்டு அல்லது சங்கம் மூலமாகத் தீர்மானங்கள் 31-3-1961-க்குள் அனுப்பலாம். அங்கத்தினர்களே பிரதிநிதியாக வர முடியும். விதிகளின்படி கில்டு அங்கத்தினர்கள் யூனியன் அங்கத்தினர்களாவார்கள்.

**காரியதரிசி**

# செய்தித் திரட்டு

## திருச்சிராப்பள்ளி

26-1-61ல் ஈ. ஆர். இந்து துவக்கப் பள்ளி ரங்கா குருளையர் படையினர் குடியரசு தின விழா கொண்டாடினர். அது சமயம் உயர்திரு. S. P. தங்கவேலு, B. A., B. L., அடிஷனல் பப்ளிக் பிராஸிகியூட்டர், திருச்சி, அவர்கள் தலைமைதாங்கி தேசீயக் கொடியை ஏற்றுவித்தார்.

கொடி வணக்கப் பாடலை குருளையர்கள் பாடினார்கள். பள்ளிச்சிறுமிகளால் கும்மி கோலாட்டம் போடப்பட்டன. பின்பு தலைவர் இந்நாளின் சிறப்பையும், நாம் இத்தினத்தில் மேற்கொள்ள வேண்டிய உறுதிமொழிகள் பற்றியும் எடுத்துக் கூறினார். உயர்திரு. N. சதாசிவம் B. A., L. T., பள்ளி மேற்பார்வையாளர், தலைவரையும் விருந்தினரையும் வரவேற்றுப் பேசினார். பள்ளித் தலைமை ஆசிரியர் உயர்திரு. S. சங்கர அய்யர் வந்தனோபசாரம் கூறியபின் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. தேசீயக் கீதத்துக்குப் பின் கூட்டம் இனிது கலைந்தது.

10-1-61. இன்று தேசீய உயர்நிலைப் பள்ளிச் சாரணர்கள், திருச்சி மேலப் புலிவார்டு ரோடில் உள்ள காமாட்சியம்மன் கோவில் மண்டலாபிஷேகத்தில் சேவை செய்தனர். அன்று தேசீய உயர்நிலைப் பள்ளிக்கு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் விஜயம் செய்தபொழுது சாரணர்கள் சேவை செய்தனர்.

26-1-61. இன்று குடியரசு தினம் சென்னை ராஜ்ய உள்நாட்டு மந்திரி உயர்திரு. பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் கொண்டாடப் பெற்றது. கொடியேற்று விழாவில் அமைச்சர் கலந்து கொண்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

## ஆசிரியச் சங்க ஆண்டு விழா

### காரிமங்கலம் (மையம்) சேலம் Dt.

காரிமங்கலம் மைய ஆசிரியச் சங்க ஆண்டு விழா 21-1-61 ஷை யூர் ஊராட்சி மன்றத் தலைவரும், சேலம் Dt. D. C. அங்கத்தினருமான திரு. R. S. வீரப்பச் செட்டியார் அவர்கள் தலைமையின் கீழ் நடந்தது. சங்கச் செயலாளர் திரு. D. A. L. சாஸ்திரியார் அவர்கள் வரவேற்புப் பத்திரத்தையும், ஆண்டு அறிக்கையும் வாசித்தார். ஷை யூர் உயர் நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. N. நஞ்சப்பா M. A., B. O. L., L. T. அவர்கள் "தமிழர் திருநாள்" என்பதுபற்றி நீண்டதொரு சொற்பொழி வாற்றினார். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்கட்கு திருமதி லீலாவதி ஜான்சன் B.A., B.T. அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. ஆண்டு விழாவை நன்முறையில் நடத்தியமைக்கு, தரும்புசிரகப்பள்ளித் துணை ஆய்வர் திரு. D. H. ஜான்சன் B. A., B. T. அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார். தலைவர் முடிவுரைக்குப் பின் சங்கத்துணைச் செயலாளர் திரு. M. ஷண்முகம் அவர்களால் நன்றி கூற நாட்டு வாழ்த்துக்குப் பின் தேனீர் விருந்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

## சிவகங்கைத் தாலூகா தொடக்க ஆசிரியர் ஐக்கியக் கழகம்

### தீர்மானங்கள் (19—2—1961)

(1) எல்லா ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப் படியும், இலவச மருத்துவ வசதியும் அளிப்பது.

(2) எல்லா ஆசிரியர்களுக்கும் நீண்டகால கடன் உதவி அளித்து வீடுகள் கட்டிக்கொள்ள உதவுவது.

(3) பஞ்சாயத்து யூனியனில் ஆசிரியர்களையும் பிரதிநிதியாகச் சேர்த்துக் கொள்வது.

(4) தாலூகா தொடக்க ஆசிரியர் மாநாட்டை ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நடத்துவது.

(5) சென்னை மாநில கல்வி இயக்குநர் அவர்களுக்கு பத்மஸ்ரீ பட்டம் அளித்த மத்திய அரசினரைப் பாராட்டுவது.

(6) தனியார் பள்ளிகளுக்கு முதல் தேதியே ஊதியம் வழங்க ஏற்பாடு செய்த அரசினரைப் பாராட்டுவது ஆகிய தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

# ஜெர்மன் திரைப் படங்கள் தம்மைத் தாமே தணிக்கை செய்துகொள்ளுகின்றன

எதையும் ஏற்கக்கூடிய வயதில் இளைஞர்களுடைய மனத்தைத் திரைப் படங்கள் கெடுத்துவிடுகின்றன என்பதால், பாரதநாடு முழுவதிலும் பெற்றோர்களும், சமூக ஊழியர்களும் திரைப் படங்கள் குறித்துப் பெரிதும் கவலைகொண்டிருக்கிருர்கள். தில்லி, பம்பாய், கல்கத்தா முதலிய பெரிய நகரங்களில் இளைஞர்களின் குற்ற நடவடிக்கைகள் வரவர அதிகமாகிக்கொண்டிருப்பதற்குக் காரணம், விரும்பத்தகாத திரைப் படங்களை அவர்கள் பார்ப்பதுதான் என்று கருதப்படுகிறது. ஏன், வயது வந்த ஆண்களும், பெண்களும்கூட, திரைப் படங்களில் சித்தரிக்கப்படும் நேர்மையற்ற போக்குக்கு பலியாகிவிடுவது வழக்கமாயிருக்கிறது.

இந்தத் தீமையை எப்படி சமாளிக்கலாம் என்பது குறித்து கட்டுரைகளிலும், உரைகளிலும், மகாநாடுகளிலும், பத்திரிகாசிரியருக்கான கடிதங்களிலும் பலவித யோசனைகள் கூறப்படுகின்றன. நாட்டில் தயாராகும் படங்களின் நேர்மை இயல்பையும், அறிவுத் தரத்தையும், உணர்ச்சி மட்டத்தையும் உயர்த்துவது தான் இந்தத் தீமையை ஒழிப்பதற்கு ஒரே வழி என்பது தெளிவு. இதைச் செயலான விதத்தில் நடத்துவது எப்படி? இந்தக் கேள்விக்கு சரியான பதில் ஒன்றுதான் உண்டு: திரைப் படங்கள் தயாரிப்போர் தமது படங்களைத் தாமே தணிக்கை செய்துகொள்வதன் மூலம் தான் இந்தத் தீமையைச் செயலான விதத்தில் ஒழிக்க முடியும். இந்த வழியை மேற்கு ஜெர்மனி வெற்றிகரமாகக் கையாண்டிருக்கிறது; சீர்திருத்த நோக்கம் கொண்ட நாடுகளுக்கு மேற்கு ஜெர்மன் வழி மிகவும் உபயோகமான எடுத்துக் காட்டாயிருக்கும். உலகில் மிகப் பெரும் அளவில் திரைப் படங்கள் தயாரிக்கும் நாடுகளில் இரண்டாவது அல்லது மூன்ருவது இடம் வகிக்கும் ஒரு நாட்டுக்கு, "திரைப் படத் தரம்" பற்றிய பிரச்னை மேலும் மேலும் தீவிரமாகிக் கொண்டிருக்கிறது; திரைப் படத் தணிக்கை போர்ட் எவ்வளவுதான் முயன்ருலும், இந்தப் பிரச்னையின் தீவிரம் குன்ருது.

மேற்கு ஜெர்மனியில் திரைப் படத் தொழிலின் குறிப்பிடத் தக்க அம்சங்களில் ஒன்று, சுய தணிக்கையாகும்.

ஹிட்லரின் ஆதிக்க காலத்தில், திரைப் படத் தொழில் முழுவதும் அரசாங்கத்தின் அறுதியான கட்டுப்பாட்டில் இருந்தது. போருக்குப் பிந்தைய சீரமைப்பின் முதல் மாதங்களில் படத் தயாரிப்பாளர் அரசாங்கக் கட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்கான வழிகளை ஆராய ஆரம்பித்தார்கள். நாளடைவில் அவர்கள், தமக்கெனவே தணிக்கை முறை ஒன்றை வகுத்துக்கொள்வதென்று முடிவு செய்தார்கள். 1945-ஆம் ஆண்டுக்கும், 1949-ஆம் ஆண்டுக்கும் நடுவே, ஜெர்மனி தேசம், நேச நாடுகளின் நிர்வாகத்தில் நாலு பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டது நினைவிருக்கலாம்; அமெரிக்கா, பிரிட்டிஷ், ஃப்ரெஞ்ச், ரஷ்யப் பிராந்தியங்களாக ஜெர்மனி பிரிக்கப்பட்டது. பின்பு, மறுபடி ஜெர்மன் சுயாட்சி உருவானபோது, மேற்குப் பிராந்தியங்கள் மூன்றுமாகச் சேர்ந்து மேற்கு ஜெர்மனியாகவும், ரஷ்யக் கட்டுப்பாட்டிலிருந்த பிராந்தியம் கிழக்கு ஜெர்மனியாகவும் மாறின.

மேற்கு ஜெர்மனி, திரைப் படத் தொழில் விஷயத்தில் ஜனநாயகக் கொள்கையைப் பின்பற்றுகிறது; அங்கே திரைப் படத் தயாரிப்பும், விநியோகமும் தனியார்துறைக்கே விடப்பட்டிருக்கிறது. ஆனல் ரஷ்யப் பிராந்தியமான கிழக்கு ஜெர்மனியில், திரைப் படத் தொழில் அரசாங்கக் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. மேற்கு ஜெர்மனியில் திரைப் படத் தயாரிப்பாளர், தாமே பொறுப்பேற்றுக் கொண்டவுடன், "திரைப்படத் தொழிலின் உயர் ஸ்தாபனம்" என்பதாக ஒன்றை அமைத்துக் கொண்டார்கள். அந்த ஸ்தாபனத்தின் உறுப்பினர்

ஒவ்வொருவரும் தாமாகவே முன்வந்து சுயதணிக்கை ஏற்பாடு ஒன்றிற்கு உடன் பட்டார்கள். தயாராகி வெளியாகும் ஒவ் வொரு படத்தையும், அதன் தயாரிப் பாளர், இந்த ஏற்பாட்டின்படி, ஸ்தாப னத்தின் தணிக்கை நெறிகளுக்கிணங்க ஒரு பரிசோதனைக்கு உட்படுத்துகிறார். எந்தப் படமும், போரைப் பெருமைப் படுத்தக் கூடாது; ஆத்திரமூட்டுவதா யிருக்கக்கூடாது; யாரையும் முறை கேடான காரியங்களுக்குத் தூண்டிவிடு வதாயிருக்கக்கூடாது. இவைதான் அந்த நெறிகள். வெளியாகும் படங்களை விளம் பரப்படுத்துவதற்கான சுவரொட்டிகளும், புகைப்படங்களும்கூட இந்தப் பரிசோத னைக்கு உள்ளான பின்னர்தான் அனு மதிக்கப்படுகின்றன.

சுய தணிக்கை என்பது பின்வரும் முறையில் கடைப்பிடிக்கப்படுகிறது: திரைப்பட மொன்றின் சில பகுதிகள், ஸ்தாபனக் கட்டுப்பாட்டு விதிகளை மீறிய வையாகக் கருதப்பட்டால், அந்தப் பகுதி களை மாற்றிய பின்னரோ அல்லது அந்தப் பகுதிகளையே வெட்டி எடுத்த பின்னரோதான் திரைப்படத்தை வெளி யிட முடியும். அந்தத் திரைப்படத்தைத் தணிக்கைக்கெனக் கொடுக்கும் தயாரிப் பாளர், தணிக்கைக் குழுவின் முடிவுகளை ஒப்புக் கொள்ளாவிட்டால், அந்த முடிவு களுக்கு எதிராக அவர் அப்பீல் செய்து கொள்ளலாம். அதாவது, அந்த முடிவு களை எதிர்த்து, அவர் இரண்டாவது தணிக்கைக் குழு ஒன்றிடம் தமது படத் தைத் தாக்கல் செய்து அதன் தீர்ப்பைக் கேட்கலாம். அந்த இரண்டாவது குழு வெளியிடும் கருத்தையும் அவர் ஒப்புக் கொள்ளாவிட்டால், மூன்றாவது குழு ஒன்றிடம் அவர் மறுபடி அப்பீல் செய்து கொள்ளலாம். ஆனால் சாதாரணமாக மூன்றாவது குழு வரை யாரும் போவ தில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

சுய தணிக்கைக் குழுக்களில் திரைப் படத் தொழில் பிரதிநிதிகள் யாரும் கிடையாது. மேற்கு ஜெர்மனியில் சட் டப்படி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், தொழிலா ளர் யூனியன் பிரதிநிதிகளும், இளைஞர் ஸ்தாபனங்கள், மத ஸ்தாபனங்கள் (கத் தோலிக்க, ப்ராடெஸ்டன்ட்) ஆகியவற் றின் பிரதிநிதிகளும் அந்தக் குழுக்களில் இடம் பெறுகிறார்கள். இவர்களைத் தவிர கதை யம்சத்தையும், நேர்மைத் தரத் தையும், மற்ற பண்புகளையும் அடிப்படை யாகக் கொண்டு திரைப்படங்களை மதிப் பிடுவதற்கு, தம் தொழில் அனுபவத்தின் மூலம் திறம்படைத்தவர்கள் சிலரும் அந்தக் குழுக்களில் இருக்கிறார்கள். பத்திரிகையாளர், விஞ்ஞானிகள், க[illegible] சாரத் துறையின் பிரமுகர்கள் [illegible] யோர் இம்மாதிரி இடம் பெறுகி[illegible]

சுய தணிக்கை முறை என்பது, இ[illegible] ஞர்களுக்கான திரைப்படங்களைத் தயா ரித்து வெளியிடுவதில் ஓர் இறுதியான முக்கியத்துவம் பெற்று விட்டது; இந்த அம்சத்தை எல்லாவற்றுக்கும் மேலாகக் குறிப்பிட வேண்டும்.

சுய தணிக்கைக்கான ஏற்பாடு எவ் விதச் சிக்கலும் இல்லாமல், வெற்றிகர மாக நடந்தேறி வருகிறது.—"இன்ட்ரா"

**Whatever Books you require in Tamil & English**

*Please send your library orders to*

**SELVI PATHIPPAHAM, KARAIKUDI-1**

**செல்வியின் புதிய நூல்கள்**

| | |
|---|---|
| **டாக்டர் வ. சுப. மாணிக்கம்** | ரூ. |
| இரட்டைக் காப்பியங்கள் (இரண்டாம் பதிப்பு) | 6–50 |
| கொடைவிளக்கு | 1–50 |
| தொல்காப்பியப் புதுமை | 2–50 |
| **இரா. சாரங்கபாணி** | |
| திருக்குறள் உரைவேற்றுமை— அறம் | 4–00 |
| ,, பொருட்பால் | 7–00 |
| **தமிழண்ணல்** | |
| காதல் வாழ்வு (நாட்டுப் பாடல்) | 2–25 |
| **நாக. முத்தையா** | |
| குழந்தைப் பாடல்கள் | 1–50 |
| **கல்வி கோபாலகிருஷ்ணன்** | |
| சூரப்புலி | 1–00 |
| **இராமசாமித் தேவர்** | |
| வேள் பாரி (வில்லுப் பாட்டு) | 0–50 |

**செல்வி பதிப்பகம் :: காரைக்குடி**

எலிமெண்டரி பாடசாலேக்குரிய

# எமது புதிய புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதியவை

## 1—5-ம் வகுப்புகளுக்குரியவை

### பொங்கல் தமிழ் வாசகம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (முதல் வகுப்பு) | 37 | ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 40 | ,, |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 50 | ,, |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 65 | ,, |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | 85 | ,, |

### கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (முதல் வகுப்பு) | 40 | ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 40 | ,, |

### லீலாவதி சுலப கணிதம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 90 | ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | ரூ. 1 00 | |

### நவீன சுலப கணிதம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | ரூ. 1 25 | |

### நவீன சமூக வரலாறு

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 45 | ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 75 | ,, |

### புது முறை சமூக வரலாறு

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | ரூ. 1 12 | |
| இரண்டாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | ரூ. 1 90 | |

### நமது இயற்கைப் பாடமும் தோட்ட வேலேயும்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 40 | ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 40 | ,, |
| மூன்றும் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 80 | ,, |

### கிண்டர்கார்டன் தமிழ் அப்பியாசங்கள்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 60 | ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 60 | ,, |
| மூன்றும் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | 60 | ,, |

## பி. ஜி. பால் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னே-1

**Regd. No. M. 3473**

Registered with the Registrar of Newspapers for India under R. N. No. 1230/57.

# BALAR KALVI

FORM IV

(*See Rule* 8)

Statement about ownership and other particulars about the newspaper, BALAR KALVI to be published in the first issue after the last day of February each year under Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

| | |
|---|---|
| 1. Place of Publication : | Raja Annamalaipuram, Madras-28. |
| 2. Periodicity of its publication : | Monthly. |
| 3. Printer's Name : | Sri T. K. Venkatesan. |
| Nationality : | Indian. |
| Address : | The Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18. |
| 4. Publisher's Name : | Sri S. D. Krishnamurthy Rao. |
| Nationality : | Indian. |
| Address : | Secretary, The South India Teachers' Union, Madras-28. |
| 5. Editor's Name : | Sri G. Krishnamurthy, M.L.C. |
| Nationality : | Indian. |
| Address : | President, The South India Teachers' Union, Madras-28. |
| 6. Names and Addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. | The South India Teachers' Union, Raja Annamalaipuram, Madras-28. |

I, S. D. Krishnamurthy Rao, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) S. D. KRISHNAMURTHY RAO
(Signature of Publisher.)

Date : 28-2-1961.

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited by Sri G. Krishnamurthi, M.L.C. and Published by Sri S. D. Krishnamurthi Rao, B.A., L.T., for the S. I. T. U. at Raja Annamalaipuram, Madras-28.